1971 டிசம்பர் 13]

இங்கேயிருந்து வெளியேற்றப்பட்டவுடன் அவர்களுக்கு மாற்று இடம் அளிக்கப்பட்டு, அவர்கள் வாழ்க்கைக்கு வழி செய்யப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பெரும்பாலும் பர்மா போன்ற நாடுகளிலிருந்து வந்தவர்கள் என்று கூறுவது அவ்வளவு சரியான தகவல் அல்ல. அவர்கள் வருவதற்கு முன்பே இப்படி நடைபாதைகளை இங்கேயுள்ள வியாபாரிகள் பயன்படுத்திக் கொண்டு வந்தார்கள். அவர்களுக்கும் இவர்களுக்கும் சேர்த்து மாற்று இடங்களை அளிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, பல பகுதிகளில் மாற்று இடங்கள் தரப்பட்டிருக்கின்றன. இன்னும் தரப்படாதவர்களுக்கு இடங்கள் தரப்படுவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவரவர்களே, சென்னையில் நடைபாதையிலே ஆங்காங்கு உள்ளவர்கள் பல கோயில்களைக் கட்டி நடைபாதைகளில் பொதுமக்களுக்குத் தொல்லை கொடுத்துக்கொண்டிருக்கிறார்களே, அதனால் அரசாங்கம் அந்த நடைபாதையிலுள்ள கோயில்களை அகற்ற உடனடியாக ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கேள்வி நடைபாதை வியாபாரிகளைப் பற்றியது. பக்திபூர்வமாக ஏற்கனவேயிருக்கும் கோயில்கள் அனுமதிக்கப்படும். வியாபாரத்திற்காக ஏற்படும் கோயில்கள் அனுமதிக்கப்பட மாட்டாது.

Ramaswamy Raja Polytechnic

* 300 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether any accused wanted in connection with the alleged misappropriation of funds in 1965, 1966 and 1967 at the Ramaswamy Raja Palytechnic Rajapalayam is still at large ; and

(*b*) if so, the details of the steps taken to apprehend him ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Staff of aided Colleges

* 301 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Government has any proposal to extend to the staff of aided Colleges the same benefits as granted to the staff of Government Colleges;

(*b*) if so, the details thereof; and

(*c*) if not, the reasons therefor?